

පරිසරය ස්වාභාවික සම්පත් හා තිරසාර සංවර්ධනය පිළිබඳ
ආංශික අධීක්ෂණ කාරක සභාව
"මැණික් සහ ස්වර්ණාභරණ ක්ෂේත්‍රය වැඩි දියුණු කිරීමට අදාල බදු ප්‍රතිපත්ති" සම්බන්ධයෙන්
වන වාර්තාව
පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලද්දේ,
ගරු අජිත් මාන්නප්පෙරුම මහතා
කාරක සභාවේ සභාපති
2023 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා

**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய**
**துறைசார் மேற்பார்வைக் குழு**
**"இரத்தினக்கல் மற்றும் நகை துறையினை மேம்படுத்துவது தொடர்பான வரிக் கொள்கை"**
**பற்றிய அறிக்கை**
**துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்**
**கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்களினால்**
**2023 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி**
**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது**

Report of the
Sectoral Oversight Committee on Environment, Natural Resources and Sustainable Development
on "Tax policies for development of Gem and Jewellery sector"
Presented to Parliament by
The Hon. Ajith Mannapperuma
Chair of the Committee
On Friday 11th August 2023

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய

துறைசார் மேற்பார்வைக் குழு

‘‘இரத்தினக்கல் மற்றும் நகை துறையினை மேம்படுத்துவது தொடர்பான வரிக் கொள்கை’’

பற்றிய அறிக்கை

2023 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி

**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்கள்**

கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்கள் (தவிசாளர்)
கௌரவ சி.பி. ரத்நாயக்க அவர்கள்
கௌரவ ஜயந்த சமரவீர அவர்கள்
கௌரவ ஜயந்த கெட்டகொட அவர்கள்
கௌரவ துஷார இந்துனில் அமரசேன அவர்கள்
கௌரவ வருன லியனகே அவர்கள்
கௌரவ அகில எல்லாவல அவர்கள்
கௌரவ நாலக பண்டார கோட்டேகொட அவர்கள்
கௌரவ எச். நந்தசேன அவர்கள்
கௌரவ அலி சப்ரி ரஹீம் அவர்கள்
கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ அவர்கள்
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்கள்

**குழுவின் அதிகாரங்கள்**

பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் ஒன்றான இக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள், இலங்கை பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 111 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அத்தகவல்கள் www.parliament.lk என்ற இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வெளியீடுகள்**

துறைசார் மேற்பார்வைக் குழுக்களால் வெளியிடப்படும் அறிக்கைகளை பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுப் பணியகத்தினால் (குழு அறை இலக்கம் II) அல்லது www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**குழுவின் பதவியணியினர்**

திரு. ஹங்ச அபேரத்ன அவர்கள் - பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம்

திரு. ஜனகாந்த சில்வா - பணிப்பாளர், சட்டவாக்க சேவைகள்

திரு. முகம்மது மப்றூக் - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)

திருமதி சமிலா ரூபசிங்க – பிரதிப் பிரதான உத்தியோகத்தர்

**குறிப்பு மற்றும் விசாரணைகள்**

இந்த அறிக்கை தொடர்பான அனைத்து விசாரணைகளும் செயலாளர், சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். பொதுவான விசாரணைகளுக்கு, 0112777100 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**பொருளடக்கம்**

1. அறிமுகம்
2. குழுவின் பரிந்துரைகள்
3. குழுவிற்கு அழைக்கப்பட்ட பொது நிறுவனங்கள்
4. குழுவிற்கு அழைக்கப்பட்ட இரத்தினக்கற்கள் மற்றும் நகை தொழில் சார்ந்த சங்கங்கள்

**இரத்தினக்கற்கள் மற்றும் நகைத் துறையின் வளர்ச்சிக்காக வரிக் கொள்கையுடன் தொடர்புடையதாக சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் பரிந்துரைகள்**

## 1. அறிமுகம்

மடகாஸ்கர் போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து இந்நாட்டிற்கு இரத்தினக் கல் வியாபாரிகள் மறு ஏற்றுமதி செய்வதற்காக இரத்தினக் கற்களை இறக்குமதி செய்கின்ற இரண்டு வழிகள் உள்ளன. அதாவது, இரத்தினக் கற்பள் அடங்கிய பொதிகளை கையில் கொண்டுவருதல் மற்றும் முகவர் மூலம் இரத்தினக் கற்கள் அடங்கிய பொதியை கூரியர் மூலம் அனுப்புதல் என்பனவாகும்.

இரத்தினக் கற்கள் அடங்கிய பொதியை கையில் கொண்டுவரும் போது அதனை விடுவிப்பதற்கு வசதியாக இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு 200 டொலர்களை தீர்வையாகச் செலுத்தி தீர்த்துக்கொள்ளக் கூடிய வகையிலான முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு கொண்டுவரப்படுகின்ற இரத்தினக்கற்களின் அளவுக்கு எல்லை விதிக்கப்படவில்லை. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் இரத்தினக் கற்களின் வகை, அளவு மற்றும் பெறுமதி குறித்த சரியான மதிப்பீடுகள் அல்லது பதிவேடுகள் தற்போது பேணிவரப்படுவதில்லை. நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படும் இரத்தினக் கற்களுக்கு உள்நாட்டுச் சந்தையில் மிகக் குறைந்த அளவிலான கேள்வியே காணப்படுவதனால், இறக்குமதி செய்யப்படுகின்ற இரத்தினக் கற்கள் 100% பெறுமதி மேம்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கருதப்படுகின்றது.

இரத்தினக் கற்களை கூரியர் முறையில் இறக்குமதி செய்யும் போது மாத்திரம் இரத்தினக் கற்களை மதிப்பீடு செய்து அந்த மதிப்பீட்டுப் பெறுமதி மீது 2.5% சமூக பாதுகாப்பு வரியொன்று விதிக்கப்படுகிறது. இந்த வரித் தொகையால் இரத்தினக் கற்களை இறக்குமதி செய்து பெறுமதி சேர்த்து மறு ஏற்றுமதி செய்வதன் ஊடாக இத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் அதிக அனுகூலமொன்றினைப் பெற முடியாதுள்ளமையால் தற்போது விதிக்கப்பட்டுள்ள 2.5% வரியினை மெருகூட்டப்படாத இரத்தினக் கற்களுக்கு அகற்றுமாறு சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு வருகைத் தந்த இரத்தினக் கற்கள் மற்றும் நகைக் கைத்தொழில் ஈடுபட்டுள்ள வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

அனைத்து ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களை இணைய வழியூடாக பதிவு செய்தலை (Online Custom Declaration System ASYCUDA) கட்டாயப்படுத்துவதற்காக விரிவான பிரச்சாரத்தை இலங்கைச் சுங்கம் ஆரம்பித்துள்ளது. இரத்தினக் கற்கள் மற்றும் நகை தொழிலாளர்கள் இந்த திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு சுங்க முகவர் மூலம் சுங்க அறிவிப்பையும் சமர்ப்பிக்க வேண்டும். இந்த அமைப்பில், ஒருங்கிணைக்கப்படாத தனிநபர் மதிப்பீடு தயாரிப்புகளான இரத்தினக் கற்கள் மற்றும் நகைகளை ஏற்றுமதி செய்பவர்களுக்கு கடினமாக இருப்பதாகவும், இந்த அரச சார்பற்ற முகவரால் பல்வேறு முறைகேடுகள் ஏற்படுவதாகவும், அந்த முகவருக்கு அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், கடந்த சில வருடங்களாக இரத்தினபுரி, பேருவளை, ஜிந்தோட்டை போன்ற பகுதிகளில் சீன வர்த்தகர்கள் இலங்கை இரத்தினக் கற்களை மிகக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து வேறு நாடுகளுக்குச் சென்று அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், அவ்வாறே அவர்கள் இரத்தினக் கற்களைக் கொள்வனவு செய்வதற்காக பணத்தை இந்நாட்டிற்குள் கொண்டுவருகின்ற விதம் பற்றியும் இரத்தினக் கற்களை இலங்கையிலிருந்து கொண்டுசெல்லும் விதம் பற்றியும் முறையான ஒழுங்குபடுத்தல் ஒன்றினை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இலாபத்தின் மீதான வரி கணக்கீட்டை முறையற்ற வணிகமான இரத்தினக் கற்கள் மற்றும் நகை வர்த்தகத்தின் மீதும் அரசாங்கம் பின்பற்றுவதால் அதன் செலவைக் கணக்கிடுவதை எளிதாக்கும் வகையில், 2023.04.01 ஆம் திகதி முதல அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் ரூ.500,000/ - இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளை வங்கி காசோலை மூலம் மேற்கொள்ளல் வேண்டும். எனவே, ரூ.500,000/= இற்கு மேற்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது, பதிவு செய்யப்பட்ட

ஏற்றுமதியாளர்களையும் தாண்டி வரி செலுத்தாத வர்த்தகர்கள் மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்கள் (இரத்னபுரி, பேருவளை போன்ற பகுதிகளில் சட்டவிரோதப் பணத்தைப் பயன்படுத்தும் சீனப் பிரஜைகள்) அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் கைப்பணத்தில் மேற்கொள்ளப்படுவதால், பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்கள் காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு முற்படும்போது, விற்பனையாளர்கள் அவர்களிடம் வியாபாரம் செய்யத் தயங்குவதால், பதிவு செய்யப்பட்ட இரத்தினக் கல் வியாபாரிகள் மற்றும் நகை வியாபாரிகள் ஆகியோரது வணிக செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து இலங்கைக்கு தங்கத்தை இறக்குமதி செய்து நகைகளாக மாற்றி பெறுமதியை மேம்படுத்தி மீள் ஏற்றுமதி செய்யக்கூடியதாக உள்ளபோதிலும், அதற்காக சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு வசதிகள் இல்லாததால் தற்போது ஏற்றுமதி வர்த்தகம் தடைபட்டு வருகிறது.

குறிப்பாக இரத்தினக் கற்கள் மற்றும் நகை வியாபாரம் பாரம்பரிய தொழில் என்பதாலும், மற்றைய தொழில்கள் போன்று தேர்ச்சியான முறையில் நடக்கும் வியாபாரமாக இல்லாததாலும், இலாபத்தை கணக்கிட்டு வரி விதிப்பதானது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குச் செய்யும் அநீதியாக அமைவதனால் அக்கொள்கையினை இரத்துச் செய்து இரத்தினக் கற்கள் மற்றும் நகை வியாபாரிகளின் வருடாந்த மொத்த விற்பனைப் புரள்வின் மீது 2.5% வரியொன்றினை அறவிடுமாறு அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறானதொரு சூழலில், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத் துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகச் சமூகம், நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மற்றும் இலங்கை சுங்கம் ஆகிய அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில், இரத்தினக்கற்கள் அபிவிருத்தி மற்றும் நகைத் துறையின் முன்னேற்றத்திற்கும் மற்றும் இத்தொழில் பிரபலமாக உள்ள உலகின் பிற நாடுகளுடன் போட்டியாக அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய வகையில் இத்துறையை மேம்படுத்த பின்வரும் பரிந்துரைகளை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவானது பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்க ஒப்புக்கொண்டது.

## 2. பரிந்துரைகள்

1. இரத்தினக் கற்கள் மீள் ஏற்றுமதி செய்வதற்காக கூரியர் முறையின் மூலம் இரத்தினக் கற்களை இறக்குமதி செய்வதற்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள 2.5% சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியை நீக்குவதற்காக, 2023 ஜூன் 30 ஆம் திகதியன்று வர்த்தமானியை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு

2. இரத்தினக் கற்கள் அடங்கிய பொதியை கையில் கொண்டு வருதல் மற்றும் முகவர் மூலம் பொதி அனுப்புதல் ஆகிய இரண்டு முறைகளிலும், இறக்குமதியாளர் இறக்குமதி செய்யப்பட்ட இரத்தினக் கற்களின் மதிப்பின் மதிப்பீட்டு அறிக்கையை இறக்குமதியாளர் தாமாகவே சுங்கத்திற்கு வழங்க வேண்டுமென (Self Declaration the value of the Parcel)

3. இறக்குமதியின் போது இலங்கை சுங்கம் தற்போது பயன்படுத்தப்படும் (TIEP - ஏற்றுமதிக்கான தற்காலிக இறக்குமதி) இறக்குமதி முறை தொடர்ந்தும் இரத்தினக் கற்கள் மற்றும் நகை வணிகத்திற்கு அவசியமில்லை என.

4. இரத்தினக்கற்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போது சுங்க முகவர் (ஊustom Handling Agent) தலையீடின்றி, இறக்குமதியாளரால் கொண்டுவரப்பட்ட இரத்தினக் கற்களின் பெறுமதியை மிக எளிமையான முறையில் சுங்கத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையிடம் அறிவிப்பதற்கும் பொறிமுறையை அறிமுகப்படுத்துதல்

5. இரத்தினக் கற்கள் மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கான இலாபத்தின் மீதான வரி விதிப்பு முறையை இரத்து செய்து, வணிகர்களின் ஆரம்ப விற்பனைப் புரள்வு அல்லது பொருத்தமான விகிதத்தில் 2.5% வரி விதித்தல்

6. இலங்கைக்கு வந்து இரத்தினக்கல் வியாபாரத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு பிரஜைகளின் சட்டவிரோத தலையீட்டை ஒழுங்குபடுத்துவதற்காக, இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியன இணைந்து அவர்களுக்காக US$ 100,000 அல்லது 50,000 கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அக்கணக்கின் அளவின் மீது அவர்களுக்கு வர்த்தக வீசா உள்ள வெளிநாட்டவர்களுக்கு, இலங்கை வர்த்தகர் ஒருவருடன் கூட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் உரிமம் வழங்கப்பட வேண்டுமென

7. தற்போது அந்நியச் செலாவணி ஈட்டும் நகை ஏற்றுமதியாளர்கள் தங்களுடைய அந்நியச் செலாவணி வருவாயைக் கணக்கிட்டு அதில் 50% வரை வெறும் தங்கத்தை தீர்வையின்றி இறக்குமதி செய்வதற்கு இரத்தினங்கள் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பரிந்துரையின் பேரில் அனுமதித்தல்.

8. தற்போது முறைசாரா முறையில் அந்நியச் செலாவணியை ஈட்டும் சிறு வணிகர்களும் (கடற்கரைக்கடை போன்றவை) ஒரு வகைப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தி, மேலே உள்ள இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள வசதியை வழங்கும்போது அவர்களையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

9. உலகின் இரத்தினக் கற்கள் மற்றும் நகைத் தொழில் மிக வேகமாக வளர்ந்து வருவதால், அதற்குத் தேவையான பிரத்யேக இயந்திரங்கள் வேகமாக மாறுகின்றன. அதன்படி, ஏற்றுமதியாளர்களுக்கு உலகப் போட்டியை எதிர்கொள்ளத் தேவையான இயந்திரங்களை வரியின்றி கொண்டு வருவதற்கான வாய்ப்பை வழங்குதல்

10. மேலும், கொழும்பில் அமைந்துள்ள இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பிரதான நிறுவனமாக இரத்தினபுரி பிராந்தியத்தின் பிரதான நிறுவனமாகவும் அதன் கிளையொன்றை பேருவளை பிரதேசத்திலும் நிறுவுதல்.

11. தாய்லாந்து, சீனா மற்றும் ஹொங்கொங்கில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணிபுரியும் வர்த்தக அதிகாரிகளிடமிருந்து, அந்த நாடுகளில் உள்ள இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயல்முறைகளில் பின்பற்றப்படும் வரி நடைமுறைகள் மற்றும் பிற நடைமுறைகள் பற்றிய விரிவான விளக்கமொன்றை இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் தஅதிகார சபையின் அலுவலர்களுக்கு வழங்கவும், தேவைப்பட்டால், வெளிக்கள பயணங்களை ஏற்பாடு செய்தலும்.·.

## 3. குழுவிற்கு அழைக்கப்பட்ட அரச நிறுவனங்கள்

1. நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
2. இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
3. இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
4. கமநல அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட அலுவலகம், இரத்தினபுரி
5. இலங்கைச் சுங்கம்

## 4. குழுவிற்கு அழைக்கப்பட்ட இரத்தினக் கற்கள் மற்றும் நகை தொழில் சங்கங்கள்

1. இலங்கை இரத்தினக்கல் வர்த்தகர்கள் மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் பொதுச் சங்கம், இரத்தினபுரி
2. சர்வதேச இரத்தினக் கற்கள் மற்றும் நகை கண்காட்சியாளர்களின் சங்கம்
3. இரத்தினக் கற்கள் மற்றும் பசுமைச் சங்கம், இரத்தினபுரி
4. இரத்தினபுரி மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் ஜெம் சங்கம், இரத்தினபுரி

5. இலங்கை இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண சங்கம், கொழும்பு 05
6. சைனா போர்ட் ஜெம்ஸ் மற்றும் ஜுவல்லரி சங்கம், பேருவளை

**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு**

“ இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் மேம்பாடு தொடர்பான வரிக் கொள்கைகள்” தொடர்பாக சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலித்ததுடன் அது தொடர்பான குழுவின் குழுவின் பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக இந்த அறிக்கையினை குழு உறுப்பினர்களாகிய நாங்கள் அங்கீகரிக்கின்றோம்.

| | |
|---|---|
| * கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்கள் (தவிசாளர்) | - *கையெழுத்திட்டார்* |
| கௌரவ சி.பி. ரத்நாயக்க அவர்கள | ................................. |
| *கௌரவ ஜயந்த சமரவீர அவர்கள் | - *கையெழுத்திட்டார்* |
| கௌரவ ஜயந்த கெட்டகொட அவர்கள் | .................................. |
| * கௌரவ துஷார இந்துனில் அமரசேன அவர்கள் | .................................. |
| * கௌரவ வருன லியனகே அவர்கள் | ................................... |
| * கௌரவ அகில எல்லாவல அவர்கள் | - *கையெழுத்திட்டார்* |
| * கௌரவ நாலக பண்டார கோட்டேகொட அவர்கள் | .................................... |
| கௌரவ எச். நந்தசேன அவர்கள் | .................................... |
| கௌரவ அலி சப்ரி ரஹீம் அவர்கள் | .................................... |
| * கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ அவர்கள் | - *கையெழுத்திட்டார்* |
| * கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்கள் | - *கையெழுத்திட்டார்.* |

- *கையெழுத்திட்டார்*

திருமதி டீ.சீ.எஸ். ரூபசிங்க, குழுவின் செயலாளருக்காக

(*குழு உறுப்பினர்கள் இரத்தினக்கற்கள் மற்றும் நகைகள் துறைப் பற்றி கலந்துரையாடப்பட்ட குழுக் கூட்டங்களில் பங்கேற்றனர்.)